**<u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், ஈரோடு</u>**

**<u>O.S.248/2012</u>**

2020 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 05-ம் தேதி DW3 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 19 வது விதி ஏற்பாட்டின்படி திருமதி.என்.உமா மகேஸ்வரி, எம்.ஏ., எம்.எல்., முதன்மை மாவட்ட நீதிபதி என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | **சாந்தி DW3** | ஜாதி |
| த/க. பெயர் | | மதம் |
| கிராமம் | | தொழில் |
| தாலுக்கா | | வயது |
| மாவட்டம் | | |

**முதல் விசாரணை ..**

நான் இவ்வழக்கின் 5 வது பிரதிவாதி. எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். தாவா தள்ளுபடி ஆகவேண்டும். 28.03.2003 ம் தேதியில் 2 ம் பிரதிவாதிக்கு 1 ம் பிரதிவாதி எழுதிக் கொடுத்த பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தின் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.5** ஆகும். அதே தேதியில் 3 ம் பிரதிவாதி 2 ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த பதிவு செய்யப்பட்ட விடுதலைப் பத்திரத்தின் கணினி பதிவிறக்கம் செய்யப்பட்ட சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.6** ஆகும். 16.09.2009 ம் தேதி ஒரு லோகநாதன் என்பவர் 5 ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தின் கணினி பதிவிறக்கம் செய்யப்பட்ட சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.7** ஆகும். தாவா தள்ளுபடி ஆகவேண்டும்.